2013 மே 6]

403—

கால்நடை மருத்துவமனை

***1288—திரு. சு. ரவி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, பின்னவரம் ஊராட்சி, சேந்தமங்கலத்திலுள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, பின்னவரம் ஊராட்சியில் உள்ள சேந்தமங்கலம் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். இந்தக் கேள்வி இங்கு வருகின்ற நேரத்திலேயே அந்தப் பகுதிக்கு ரூ.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் ஒரு மாதத்தில் பணிகள் முடிவு பெற இருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கடந்த 2009–2010, 2010–2011 ஆம் ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ரூ.5 கோடி மட்டுமே கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் ரூ.274 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

முற்பகல் 10—40

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையில்லா நான்கு வெள்ளாடுகளும், கறவை மாடுகளும் எப்படித் தரமுடியும் என்று எக்காளம் செய்தவர்கள் மத்தியில் வறுமை நிலையில் வாழ்கின்ற பெண்களின் வாட்டத்தைப் போக்கிட, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, இரண்டே ஆண்டுகளில் 10 இலட்சம் ஆடுகளும், ஒரு இலட்சத்து இருபதாயிரம் கறவை மாடுகளும் தந்து, வாயில்லா ஜீவன்களுக்கு ரூபாய் 40 கோடி அளவில் ஜீவனமும் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி, கருணையின் வடிவமாய், அன்பின் திருவுருவமாய், ஆற்றலின் இருப்பிடமாய், வெற்றியின் விலாசமாய், நாளைய பாரதத்தின் பிரதமராக வரப்போகும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட பின்னவரம் ஊராட்சி, சேந்தமங்கலம் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டவுடனேயே, அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை நொடிப்பொழுதில் நிறைவேற்றியும், அதோடுமட்டுமல்லாமல், எனது தொகுதிக்குட்பட்ட செய்யூர், தக்கோலம் கால்நடை மருந்தகங்களுக்கு ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் நவீன மருத்துவமனையும் கட்டித் தந்த, மக்கள் பேசும் வாழும் வரலாறு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 404, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*